திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.எம்.கணேஷ்குமார், பி.இ.,

நி.மு.அ4/17444/2020

நாள் : 26. 8.2021.

பொருள்: பொதுப்பணிகள் - நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டது - பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் இணை செயலாளரின் கடிதம் எண். 2531/PSD-I/2020, நாள் 28.05.2020.
2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ4/17444/2020, நாள்: 29.09.2020.
3. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்:07.05.2021.
4. சார்நிலை அலுவலர்களின் அறிக்கைகள்.
5. தொடர்புடைய ஆவணங்கள்.

****

ஆணை:-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாக தொகுதி IV-ல் அடங்கிய பணிகளில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணிக்கு பார்வை 1 -இல் காணும் கடிதம் மூலம் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பார்வை 2 -இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின் படி இம்மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை -4-இல் காணும் சார்நிலை அலுவலர்களின் அறிக்கையில் தனியர்கள் கீழக்காணும் பட்டியலில் கலம் எண் 3- இல் கண்டவாறு இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர் என தெரிவித்துள்ளனர். மேலும் தனியர்களின் பணியினை பணியேற்ற நாள் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்திட பரிந்துரை செய்துள்ளனர்.

Scanned with CamScanner

வ. எண்	பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம்	பணியில் சேர்ந்த நாள்	பணிவரன்முறை செய்யப்படும் நாள்
(1)	(2)	(3)	(4)
1)	A.இம்மானுவேல், இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், பாளையங்கோட்டை.	01.10.2020 முற்பகல்	01.10.2020 முற்பகல்
2)	P.காளியப்பன், இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருநெல்வேலி.	29.09.2020 பிற்பகல்	29.09.2020 பிற்பகல்
3)	C.கிருஷ்ணவேல், இளநிலை வருவாய் ஆய்வாளர் ("கா3"), மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருநெல்வேலி.	29.09.2020 பிற்பகல்	29.09.2020 பிற்பகல்
4)	K.மாரிமுத்து, இளநிலை வருவாய் ஆய்வாளர் ("ந2"), மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருநெல்வேலி.	29.09.2020 பிற்பகல்	29.09.2020 பிற்பகல்
5)	M.கலைமதி, இளநிலை வருவாய் ஆய்வாளர், சார் ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி.	29.09.2020 பிற்பகல்	29.09.2020 பிற்பகல்
6)	S.ராஜலெட்சுமி, இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், திருநெல்வேலி.	29.09.2020 பிற்பகல்	29.09.2020 பிற்பகல்
7)	V.மகேஷ்வரன், இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் (ச.பா.தி) அலுவலகம், அம்பாசமுத்திரம்.	30.09.2020 முற்பகல்	30.09.2020 முற்பகல்

Scanned with CamScanner

இந்நேர்வில் சார்நிலை அலுவலர்களின் பரிந்துரை அறிக்கைகளின் பேரில், பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலரது கடிதத்தில் தெரிவித்துள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தனியர்கள் இம்மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியேற்ற நாள் முதல் மேற்காணும் அட்டவணையில் தனியர்களுக்கு எதிரே உள்ள கலம் எண் 4- இல் கண்டவாறு தனியர்களின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/ Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination-IV for the year 2018-2019 and 2019-2020"

மேற்படி உத்திரவு விபரத்தினை சம்பந்தப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)
திருநெல்வேலி.

பெறுநர்
சம்பந்தப்பட்ட நபர்கள்.

நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
நகல் : கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல் : கோட்டாட்சித்தலைவர், திருநெல்வேலி.
நகல் : மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், திருநெல்வேலி.
நகல் : மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்கு), திருநெல்வேலி.
நகல் : வட்டாட்சியர், பாளையங்கோட்டை/
நகல் : வட்டாட்சியர் (ச.பா.தி), அம்பாசமுத்திரம்.
நகல் : அ4 இருப்பு கோப்பு.

Scanned with CamScanner